Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 18, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 4

# வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி வருகிற 21-ந் தேதி உருவாகிறது

## கேரளா, கர்நாடகா மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 18 2021: தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் பரவலாக பெய்து வருகிறது. ஒரு சில மாவட்டங்களில் கனமழையும் பெய்கிறது.

சென்னையில் கடந்த 3 நாட்களாக மழை பெய்கிறது. இதனால் மண்ணில் ஈரப்பதம் ஏற்பட்டு குளிர்ந்த காற்று வீசுகிறது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பெய்து வரும் மழையால் ஏரி, குளங்களிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மேலும் 2 நாட்களுக்கு சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வடமேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி வருகிற 21-ந் தேதி உருவாகிறது. இதனால் கேரளா, கர்நாடகா மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் தமிழகத்தில் படிப்படியாக மழை குறையும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. சென்னையில் நேற்று மாலை முதல் பலத்த மழை பெய்தது. நகரின் பல்வேறு இடங்களில் பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

புறநகர் பகுதிகளிலும் இந்த மழை நீடித்தது. நள்ளிரவு வரை இடி-மின்னலுடன் பல இடங்களில் மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது.



ஒரு சில இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. இதனால் மின்சாரமும் தடைபட்டது. போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டன. தொடர்ந்து 3 நாட்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருவதால் சென்னை வாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் காலையில் வெளிவரும்
ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழுக்கு
மாவட்டம், தாலுகா, பகுதி, நகர வாரியாக
அனுபவமுள்ள நிருபர்கள் தேவை
தொடர்புக்கு 8148231942
hellomadrasdaily@gmail.com

# மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்த தகவல்கள் கடைகோடி மக்களையும் சென்றடைய வேண்டும்: மத்திய தகவல் ஒலிபரப்பு ஊடகப் பிரிவுகளுக்கு மத்திய இணையமைச்சர் எல்.முருகன் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 18, 2021 பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்படுத்தும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்த விரிவான தகவல்களை கடைகோடி மக்களுக்கும் எடுத்து செல்லும் வகையில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அனைத்து ஊடகப் பிரிவுகளும் தங்களது செயல்பாட்டினை முடுக்கி விடவேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார். மத்திய அமைச்சரவையில் இணையமைச்சர் பொறுப்பை ஏற்றபிறகு முதன்முறையாக சென்னை வந்த அவரை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தென்மண்டல தலைமை இயக்குனர் வெங்கடேஸ்வர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர். அவர்களிடையே பேசிய அமைச்சர், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை ஊடக அதிகாரிகள், சமூக ஊடகங்களில் அதிநவீன தொழில்நுட்பமான வாட்ஸ் அப், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், பேஸ்புக் ஆகியவற்றைப் பயன்படுத்தி மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள 5 கிலோ இலவச அரிசி / கோதுமை திட்டத்தின் பயன்கள் குறித்த செய்தியினை மக்களிடம் எடுத்து செல்ல வேண்டும் என்று கூறினார். நாட்டில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச தடுப்பூசி வழங்கவும், மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் மத்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மக்களின் விருப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் அகில இந்திய வானொலி மற்றும் பொதிகை செய்தி தொலைக்காட்சியும் தங்களது செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் ஒலி, ஒளிபரப்பு செய்திட வேண்டும் எனவும் கூறினார். விவசாயிகள், கொரோனா பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக பணம் வரவு வைக்கும் முறையினால் பயனடைந்தோர்களின் அனுபவங்கள் குறித்த தகவல்களையும், மத்திய அரசின் மின்னணு ஊடகங்கள் செய்தி வெளியிட வேண்டுமென கூறினார். இதேபோல், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புத்தக வெளியீட்டு பிரிவு தமிழ்நாட்டின் வரலாறு, பாராம்பரியம், மொழியின் தொன்மை குறித்த புத்தகங்கள் அதிக அளவில் வெளியிட வேண்டும் என்று அவர் கூறினார். தொடர்ந்து, மத்திய அமைச்சர் செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு ஊடகப் பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு







செய்தார். இந்த நிகழ்ச்சியில் சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் மா. அண்ணாதுரை, இயக்குநர் குருபாபு பலராமன், மண்டல மக்கள் தொடர்பு அலுவலகத்தின் இயக்குநர் காமராஜ், அகில இந்திய வானொலி மற்றும் பொதிகை தொலைக்காட்சியின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.






ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஒன்றிய பா.ஜ.க. அரசின் கேஸ் & பெட்ரோல் & டீசல் விலை உயர்வை கண்டித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 18 2021: இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சென்னை மாவட்டம் சார்பில் கேஸ், பெட்ரோல், டீசல் விலையை தினந்தோறும் உயர்த்தி மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாநில பொதுச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் தலைமையில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 16.07.2021 அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

மாநிலச் செயலாளர் கே.எம். நிஜாமுதீன், கண்டன உரையாற்றினார். மாநிலச் செயலாளர் மில்லத் எஸ்.பி. முஹம்மது இஸ்மாயில், மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.ஏ. இப்ராஹிம் மக்கி, ஆப்பனூர் ஆர். ஜபருல்லாஹ், கே.ஏ.டபிள்யூ. காதர் ஷரீப்ல, இளைஞரணி (எம்.ஒய்.எல்.) மாநில பொதுச் செயலாளர் எஸ். அன்சாரி மதார், மாணவரணி (எம்.எஸ்.எஃப்.) தேசிய பொதுச் செயலாளர் எஸ்.ஹெச். முஹம்மது அர்ஷத், எம்.எஸ்.எஃப். மாநிலத் தலைவர் பழவை எம். அன்சாரி, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் சல்மான் முஹம்மது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை மாவட்டத் தலைவர்கள் கமுதி பி. சம்சுதீன், பூவை எம்.எஸ். முஸ்தபா, யூசுப் குலாம் முஹம்மது, மண்ணடி ஏ.ஹெச்.எம். இஸ்மாயில், மாவட்டச் செயலாளர்கள் எம்.என்.எம். இர்பான் ஜுபேர், மடுவை பீர் முஹம்மது, எஸ்.எம். ஆலம்கான், முதஸ்ஸர் காலித் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் திரளாக பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

மாநில பொதுச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் பேசியதாவது:

ஒன்றியத்தில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி 2013 ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பெட்ரோல் விலை ரூ.51 ஆகவும், கேஸ் சிலிண்டர் விலை ரூ. 350 ஆகவும் இருந்தது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பா.ஜ.க. கடுமையான விலையுயர்வு என்று குற்றம் சாட்டி போராட்டங்களை நடத்தியது.

ஆனால், இன்று உலக சந்தையில் கச்சா பொருட்களின் விலையில் பெரிய மாற்றமில்லை. ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் வயிற்றில் அடித்து 3 மடங்கு உயர்த்தி வஞ்சிக்கிறது.

இந்திய பொருளாதாரத்தை பெரும் முதலாளிகளிடம் தாரை



வார்த்துவிட்டு நடுத்தர ஏழை எளிய மக்கள் வாழ்வாதாரத்தை அழித்து வருகிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதுடன் மதங்களுக்கிடையே வேறுபாடுகளை அதிகப்படுத்தி மத துவேசங்களை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்தி வருகிறது.

குறிப்பாக தமிழகத்தில் கொங்குநாடு என்ற புது முழக்கத்தை ஏற்படுத்தி ஒன்றியத்தில் ஆட்சிசெய்யும் பா.ஜ.க. தனது அரசியல் லாபத்திற்காக எதையும் செய்யலாம் என்று துணிந்திருப்பதை இ.யூ. முஸ்லிம் லீக் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

ஒன்றுபட்ட தமிழ்நாடே அனைவருடைய விருப்பம். பா.ஜ.க.வின் சூட்சமம் இங்கு ஒருகாலமும் எடுபடாது.

தலைநகர் டெல்லியில் பா.ஜ.க.விற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டுமென்று தலைவர்கள் முயற்சித் வருகிறார்கள். அதனை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வரவேற்கிறது.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பா.ஜ.க., அதற்கு அடிமையாக இருந்த அ.தி.மு.க.விற்கு எதிராக அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டி சட்டமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி கண்டார்.

முதலமைச்சராக வெற்றி பெற்ற பிறகு டெல்லிக்குச் சென்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்தித்தபோதும் பா.ஜ.க.விற்கு எதிராக அனைவரும் ஒன்று திரள வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். நமது முதல்வரின் முயற்சி வெற்றி பெறும் என நாங்கள் நம்புகின்றோம்.

காங்கிரஸ் தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி உருவாகிட நாங்கள் என்றும் துணை நிற்போம். இவ்வாறு கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் பேசினார்.

# மேகதாதுவில் 100 சதவீதம் புதிய அணை கட்டுவது உறுதி பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார் - எடியூரப்பா பேட்டி

சென்னை, ஜூலை 18 2021: மேகதாதுவில் அணை கட்டுவதற்கு அனுமதி வழங்கும்படி பிரதமர் நரேந்திர மோடியை நேற்று நேரில் சந்தித்த கர்நாடக முதல்வர் எடியூரப்பா வலியுறுத்தினார்.

மேகதாதுவில் புதிய அணை கட்டுவது உறுதி என்றும் அவர் கூறினார்.

தமிழக அரசின் எதிர்ப்பை மீறி கர்நாடகாவின் மேகதாது என்ற இடத்தில் அணை கட்ட கர்நாடக அரசு உறுதியாக உள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்துக்கட்சி குழு டெல்லியில் நேற்று மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்தை நேரில் சந்தித்து, மேகதாது திட்டத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கோரி கடிதம் வழங்கியது.

இந்த நிலையில் கர்நாடக முதல்வர் எடியூரப்பா நேற்று மாலை 6.30 மணிக்கு பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். அப்போது மேகதாதுவில் அணை கட்டுவதற்கு வெவ்வேறு துறைகளிடமிருந்து விரைவில் அனுமதி தரும்படி எடியூரப்பா வலியுறுத்தினார்.

கர்நாடக அமைச்சரவை விரிவாக்கம், கொரோனா தடுப்பூசி, வெவ்வேறு அபிவிருத்தி பணிகள் உட்பட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து இருவரும் ஆலோசித்தனர்.

பிரதமருடனான சந்திப்பிற்கு பின் வெளியே எடியூரப்பா கூறுகையில், 'என் கோரிக்கைக்கு பிரதமர் ஒப்புதல் அளித்துள்ளார் என தெரிவித்தார்.

பிரதமர் சந்திப்புக்கு முன்னதாக டெல்லி கர்நாடக பவனில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் எடியூரப்பா கூறியதாவது:-

மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தால் தமிழகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது. இதுகுறித்து தமிழக முதலமைச்சருக்கு கடிதம் எழுதி தெரிவித்தேன். ஆனால் அந்த மாநிலம் மேகதாது திட்டத்தை எதிர்ப்பதில் பிடிவாதமாக உள்ளது.




மேகதாதுவில் அணை கட்ட சட்டத்தில் சாதகமான அம்சங்கள் உள்ளன. இந்த திட்டத்தை செயல்படுத்த நாங்கள் சக்தியைமீறி முயற்சி செய்கிறோம். அதனால் மேகதாதுவில் 100 சதவீதம் புதிய அணை கட்டுவது உறுதி. கர்நாடக மக்களுக்கு இந்த உறுதிமொழியை அளிக்கிறேன்.

கர்நாடகா அணை கட்டுவதை தமிழகம், கேரளா புதுச்சேரி மாநிலங்கள் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருகின்றன. மேகதாது அணையை பொறுத்தவரை மற்ற மாநிலங்களின் எதிர்ப்பை பொருட்படுத்த மாட்டோம். இந்த விவகாரத்தில் அண்டை மாநிலங்கள் கர்நாடகாவுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டாம் என கேட்டுகொள்கிறேன். இவ்வாறு எடியூரப்பா கூறினார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# 36 சதவீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அடுத்த 5 மாதங்களில் மாநில அரசுகளுக்கு 65.5 கோடி கூடுதல் கொரோனா தடுப்பூசிகள்

சென்னை, ஜூலை 18 2021: நாடு முழுவதும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் கொரோனா வைரஸ் பரவி மக்களை அச்சுறுத்தி வருகிறது.

கொரோனா முதல் அலை பரவலின்போது ஊரடங்கு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமாகவே கொரோனா பாதிப்பு குறைந்தது.

இந்த நிலையில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த கடந்த ஜனவரி மாதம் 16-ந்தேதி முதல் நாடு முழுவதும் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது.

சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா நிறுவனம் தயாரித்த கோவிஷீல்டு மற்றும் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவேக்சின் ஆகிய 2 தடுப்பூசிகள் மத்திய அரசு சார்பில் கொள்முதல் செய்யப்பட்டு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு போடப்பட்டு வருகிறது.

சமீபத்தில் ரஷியா நிறுவனம் தயாரித்த ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை சில தனியார் மருத்துவமனைகள் கொள்முதல் செய்து கட்டணம் அடிப்படையில் பொதுமக்களுக்கு போட்டு வருகின்றன.

தடுப்பூசியை பொறுத்தவரை முதலில் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், முன்களப்பணியாளர்களுக்கு போடப்பட்டது. அதன்பிறகு 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கும், பிறகு 45 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கும் போடப்பட்டது.

தற்போது 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கொரோனா பரவல் கட்டுக்குள் இருந்தாலும் அடுத்த மாதம் இறுதியில் இருந்து கொரோனா 3-வது அலை பரவும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து வருகிறார்கள்.

ஆனால் தடுப்பூசி திட்டத்தை பொறுத்தவரை நாடு மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. இந்தியாவில் இதுவரை 36 சதவீதம் பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்கள் மத்தியில் கொரோனா 3-வது அலை அச்சம் எழுந்துள்ளது. எனவே கொரோனா 3-வது அலையை தடுக்கும் வகையில் தடுப்பூசி போடும் வேகத்தை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் தடுப்பூசி போடும் வேகத்தை அதிகரிக்கவும், அனைவருக்கும் தடுப்பூசி போடும் வகையிலும் 65.5 கோடி தடுப்பூசிகளை கொள்முதல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டது.

தற்போது தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்களும் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனத்திடம் இருந்து 37 கோடி கோவிஷீல்டு தடுப்பூசிகளை மத்திய அரசு வாங்குகிறது.

அதே போல் பாரத் பயோடெக் நிறுவனத்திடம் இருந்து 28.5 கோடி கோவேக்சின் தடுப்பூசிகளை மத்திய அரசு கொள்முதல் செய்கிறது.

இதற்காக 2 நிறுவனங்களிடமும் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. இப்போது முதல் வருகிற டிசம்பர் மாதத்துக்குள் இந்த தடுப்பூசிகளை 2 நிறுவனங்களும் தயாரித்து மத்திய அரசுக்கு அளிக்க வேண்டும்.

மத்திய அரசு இந்த தடுப்பூசிகளை வாங்கி மாநில அரசுகளுக்கு வினியோகம் செய்யும். அதன் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடும் வேகம் அதிகரிக்கப்படும்.

கோவிஷீல்டு தடுப்பூசி ரூ.205 என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கோவேக்சின் தடுப்பூசியை ரூ.215 என்ற நிலையில் மத்திய அரசு வாங்குகிறது. இதற்கு 5 சதவீதம் ஜி.எஸ்.டி. வரியும் விதிக்கப்படுகிறது.

எனவே அடுத்த 5 மாதங்களில் மாநில அரசுகளுக்கு 65.5 கோடி கூடுதல் கொரோனா தடுப்பூசிகள் கிடைக்கும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வருட இறுதிக்குள் இந்தியாவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே தடுப்பூசி செலுத்தும் திட்டத்தின் வேகம் அதிகரிக்கப்பட்டு உள்ளது.

மேலும் பிற நிறுவனங்கள் மூலம் தனியாருக்கு கிடைக்கும் தடுப்பூசிகளும் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் என்று மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விழுப்புரம் - வழுதாவூர் சாலையில் குடிநீர் கேட்டு கிராம மக்கள் சாலை மறியல். அதிகாரிகள் சமாதானம்

விக்கிரவாண்டி, ஜூலை 18 2021: விக்கிரவாண்டி அருகே தொரவியில் புதியதாக அமைக்கப்பட்ட குடிநீர் கிணற்று தண்ணீரை வழங்க கோரி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்கு பிறகு சாலை மறியல் வாபஸ் பெற்றனர்.

விக்கிரவாண்டி ஒன்றியம் தொரவி காலனி பகுதி மக்களுக்கு 20 ஆயிரம் கொள்ளவு மேல்நிலை நீர் தேக்க மூலம் பள்ளிக்கூடத்தின் அருகிலுள்ள போர்வெல்லிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது புதியதாக வராக நதி ஆற்றுப்பகுதியில் குடிநீர் திறந்த வெளி கிணறு அமைத்துள்ளனர் . நேற்று பகல் 12 மணியளவில்

மக்கள் அதிகாரம் தலைவர் ராஜூவ் காந்தி தலைமையில் சுமார் 40 பேர் கொண்ட இளைஞர்கள் , தங்களது வழங்கப்படும் குடி தண்ணீரை மாற்றி புதியதாக அமைக்கப்பட்ட கிணற்றிலிருந்து குடிநீர் வழங்க வேண்டும் என கூறி விழுப்புரம் - வழுதாவூர் சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த விக்கிரவாண்டி சப்-இன்ஸ்பெக்டர்கள் பரணிநாதன், சரவணன், தனிப்பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் சங்கர வடிவேல் , துணை பி.டி.ஓ., கலைவாணி ஆகியோர் பொதுமக்களிடத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர். அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதின் பேரில் 12.30 மணிக்கு அங்கிருந்து கலைந்து சென்றனர் . இதனால் அப்பகுதியில் அரை மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

விக்கிரவாண்டி அடுத்த தொரவியில் குடிநீர் கேட்டு சாலைமறியல் செய்த இளைஞர்களிடம் சப்-இன்ஸ்பெக்டர் பரணிநாதன் பேச்சு வார்த்தை நடத்தினார்.





விக்கிரவாண்டி அடுத்த தொரவியில் குடிநீர் கேட்டு இளைஞர்கள் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஊத்தங்கரை சார்ந்த அறம் விதை அறக்கட்டளைக்கு காமராசரின் தன்னலம் கருதா விருது

ஊத்தங்கரை, ஜீலை, 17 2021: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் இயங்கி வரும் அறம் விதை அறக்கட்டளை இயங்கி வருகிறது, இந்த அறக்கட்டளை உள்ள நண்பர்கள் தொடர்ந்து தமிழகம் முழுவதும் மரம் செடி விதை நடுதல், கொரோனா ஊரடங்கால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளிகளுக்கு பல்வேறு வசதிகளை இலவசமாக செய்து தருதல், சாலை ஓரத்தில் இருக்கும் ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்குதல் போன்ற பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர், இந்த அறம் விதை அறக்கட்டளை தொடர் சமூக சேவையை பாராட்டி திண்டுக்கல்லில் இயங்கிவரும் பசுமை வாசல் பவுண்டேஷன் மற்றும் மனிதநேய மக்கள் அறக்கட்டளை இணைந்து பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டுக்கான காமராசரின் தன்னலம்



கருதா விருதிற்கு ஊத்தங்கரை அறம் விதை அறக்கட்டளை தேர்வு செய்து, தன்னலம் பாராது பிறர் நலம் பேணி காலம் கருதாது களப்பணியாற்றும் கருணைக்கடல் அறம் விதை அறக்கட்டளைக்கு விருதை வழங்கிச் சிறப்பித்துள்ளனர், மேலும் இந்த அறக்கட்டளை தகடூர் மனிதநேயம் விருது, கலைஞரின் சங்கத்தமிழ் விருது போன்ற விருதுகளை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது,

**மதுரை: மதுரை மாவட்டம் கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட காரிசேரி கிராமத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக கார்சேரி ஊராட்சி, ஸ்ரீம்சேவா டிரஸ்ட், லயன்ஸ் கிளப் மதுரை நவ்ஜீவன், எக்ஸ்பிரஸ் பிரியாமணி சார்பாக இலவச தடுப்பூசி முகாம் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டீஸ்வரி இளவரசன் தலைமையில் நடைபெற்றது. இந்த தடுப்புச் இம்முகாமில் காரிசேரி சக்கிமங்கலம் உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு தடுப்பு ஊசி செலுத்தி கொண்டனர்.**



# வேப்பூர் அருகே கட்டாய திருமணம் செய்து வைத்த சிறுமி மீட்பு, மாப்பிள்ளை, உறவினர்கள் மீது போலீசார் வழக்கு பதிவு

வேப்பூர், ஜூலை 18 2021: வேப்பூர் அடுத்த வரம்பனூர் கிராமத்தை சேர்ந்த 17 வயது சிறுமியை அவரது பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வேப்பூர் அடுத்த புல்லூர் கிராமத்தைச் சேர்ந்த காத்தமுத்து மகன் விக்னேஸ்வரன் (வயது 25) என்பவருக்கு திருமணம் செய்து வைத்தனர்.

இந்நிலையில் விக்னேஸ்வரன் வீட்டில் அந்தப் பெண் வசித்து வந்தார் இதுகுறித்து கடலூர் மாவட்ட சமூக நல அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்தது இதனையடுத்து மாவட்ட சமூக நல ஒருங்கிணைந்த சேவை மைய நிர்வாகி வேப்பூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் வேப்பூர் போலீசார், சிறுமியை மீட்டு சமூக நல விடுதியில் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து சமூக நலத்துறை அலுவலர் வேப்பூர் காவல் நிலையத்தில் மாப்பிள்ளை விக்னேஸ்வரன், பெண்ணின் தாய், தந்தை உள்ளிட்ட உறவினர்கள் மீது கொடுத்த புகார் மீது வேப்பூர் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# வாடிப்பட்டி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தயாராகி வரும் ரூ48.60 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் மேல்நிலை குடிநீர் தொட்டி

மதுரை, ஜூலை 18 2021: மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 30 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது மதுரை மாவட்டத்திற்குட்பட்ட வாடிப்பட்டி பேரூராட்சி, மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள வாடிப்பட்டி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் போடிநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள மேல்நிலை குடிநீர் தொட்டிகள் மூலம் தடையில்லாமல் குடிநீர் வழங்கி கொண்டிருக்கிறது பேரூராட்சி நிர்வாகம்.

இந்நிலையில் பெருகிவரும் மக்கட்தொகைக்கேற்பவும் விரிவாக்கப்பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகம் எதிரே ரூ48.60 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டும் பணி விரைவாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகிறது.

இதற்கான பணிகளை பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார் தலைமையில் ஊழியர்கள், அலுவலர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர்.



# மத்திய அரசு திட்டவளர்ச்சி பணிகள் ஆய்வு கூட்டத்திற்கு ரவிக்குமார் எம்.பி., தலைமை தாங்கினார்

விக்கிரவாண்டி, ஜூலை 18.2021: விக்கிரவாண்டி ஒன்றியத்தில் நடைபெறும் மத்திய அரசு திட்ட வளர்ச்சி பணிகள் குறித்து அனைத்து அரசு துறை அலுவலர்களுடன் எம்.பி., ரவிக்குமார் ஆய்வு கூட்டம் நடத்தினார்.

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் நேற்று பிற்பகல் நடந்த அனைத்து அரசு துறை அலுவலர்களுடன் நடந்த ஆய்வு கூட்டத்திற்கு விழுப்புரம் தொகுதி எம்.பி., ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

ஒன்றியத்தில் நடைபெறுகின்ற மத்திய அரசு பணிகள் வளர்ச்சி விபரம் குறித்து அரசு அதிகாரிகளிடம் கேட்டறிந்த எம்.பி., ரவிக்குமார் பணிகளை விரைந்து முடித்திட ஆலோசனைகளை வழங்கி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட செயல்பாடுகளை முழுமையாக செய்ய உத்திரவிட்டார்.

தாசில்தார் தமிழ்செல்வி, பி.டி.ஓ., முபாரக் அலி பேக், வேளாண்மை உதவி இயக்குனர் மாதவன்,வட்டார மருத்துவமனை டாக்டர் கார்த்திகேயன், ஆய்வாளர் பாபு, மின்வாரிய உதவி பொறியாளர் சண்முகம் , குழந்தைகள் நலவளர்ச்சி திட்ட அலுவலர் சாமுண்டீஸ்வரி, மேலாளர் பாலசுப்பிரமணியன் , ஒன்றிய பொறியாளர்கள் இளையராஜா, முருகானந்தம் , வி.சி.க., மாவட்ட செயலாளர் ஆற்றலரசு, ஒன்றிய செயலாளர் வெற்றிவேந்தன் உட்பட அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி ஒன்றிய அலுவலகத்தில் நடந்த மத்திய அரசு திட்ட வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் எம்.பி., ரவிக்குமார் பேசினார். அருகில் பி.டி.ஓ., முபாரக் அலி பேக்.

# ரெனோ6 ப்ரோ 5ஜி மற்றும் ரெனோ6 5ஜி அறிமுகம் மூலமாக ஸ்மார்ட்போன் வீடியோகிராபியில் புதிய தரநிலையை அமைத்துள்ளது ஒப்போ!

சென்னை, ஜூலை 18, 2021: ஸ்மார்ட்போன் வீடியோகிராபி தரநிலையானது சர்வதேச ஸ்மார்ட் சாதனங்கள் பிராண்ட்களில் ஒப்போவை முன்னணியில் வைத்துள்ள நிலையில், புதிய நீல வண்ண வகை என்கோ ட்ரூ வயர்லெஸ் நாய்ஸ் கேன்சல் இயர்போன்களுடன் கூடிய ரெனோ6 ப்ரோ 5ஜி மற்றும் ரெனோ6 5ஜி ஆகியவற்றுடன், மிகவும் எதிர்பார்க்கப்படும் ரெனோ சீரிஸ் குறித்த அறிவிப்பை இன்று வெளியிட்டுள்ளது அந்நிறுவனம். 5ஜி சூப்பர் போன் ஆன ரெனோ6 ப்ரோ 5ஜி சில்லரை விற்பனையங்கங்களிலும் பிளிப்கார்ட்டிலும் ரூ.39,990-ல் கிடைக்கும்; ரெனோ6 5ஜி பிளிப்கார்ட்டில் ரூ.29,990-ல் கிடைக்கும்.

ரெனோ6 சீரிஸ் அறிமுகம் குறித்து ஒப்போ இந்தியாவின் தலைமை சந்தைப்படுத்துதல் அலுவலர் தமயந் சிங் கனோரியா பேசுகையில், "ஒப்போவில் தொழில்நுட்பப் புதுமைகள் ஆனது, எங்களது தயாரிப்பு மேம்பாடு மற்றும் வளர்ச்சிப் பாதைக்கான நெறிமுறைகளைச் சார்ந்துள்ளது; அதனால் எங்களது வாடிக்கையாளர்கள் மிகச்சிறப்பான புதுமைகளைக் கொண்ட ஒரு ஆல்ரவுண்டர் ஸ்மார்ட்போனை வாங்குவதற்காக, எப்போதும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறோம். மிகச்சிறப்பான காட்சித் திறன், அசரவைக்கும் வடிவமைப்பு, ஆற்றல்மிக்க செயல்பாடு மற்றும் ஒரு ஈடு இணையற்ற அனுபவத்தை இன்றைய வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பேரார்வத்துடன் வடிவமைக்கப்பட்ட ரெனோ6 சீரிசை அறிமுகப்படுத்துகிறோம். பயனர்கள் போர்ட்ரெய்ட்கள் படம்பிடிக்கும்போது ஒரு நிபுணத்துவ நிலை அனுபவத்தை வழங்கும் இந்த 5ஜி சூப்பர் போன். உண்மையிலேயே எதிர்காலத்துக்கான ஸ்மார்ட்போனாக ஒப்போ ரெனோ6 சீரிஸ் இருக்கும்" என்று தெரிவித்தார்.



இந்த அறிமுகம் பற்றி பிளிப்கார்ட் நிறுவனத்தின் வர்த்தக தலைவர் ஆரிஃப் முகமது பேசுகையில், "எங்களது பிளிப்கார்ட் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு சமீபத்திய தொழில்நுட்பத்தையும் மிகச்சிறப்பான தயாரிப்புகளையும் வழங்குவதில் உறுதிகொண்டுள்ளது. இந்த நோக்கத்துடன் ஒப்போ ரெனோ6 ப்ரோ 5ஜி மற்றும் ஒப்போ ரெனோ6 5ஜி அறிமுகப்படுத்தப்படுகின்றன. பிளிப்கார்ட் ஸ்மார்ட் அப்கிரேடு திட்டம் மூலமாக ஸ்மார்ட்போன் விலையில் 70 சதவீதத்தை மட்டும் செலுத்தி ஒப்போ ரெனோ6 5ஜியை வாடிக்கையாளர்கள் பெற முடியும். வாடிக்கையாளர்கள் தங்கள் ஸ்மார்ட்போன்களை அப்டேட் செய்வதற்கு இது மிகச்சிறப்பான வழியாகும். அதனால் அவர்களது ஆசைகளை நிறைவேற்றுவதில் விலை ஒரு தடையாக இருக்காது" என்று தெரிவித்தார்.

# "நவி நிஃப்டி 50 இன்டெக்ஸ் ஃபண்ட்" மிகக் குறைந்த கட்டணத்தில் புதிய முதலீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது, சச்சின் பன்சால் நடத்தும் நவி மியூச்சுவல் ஃபண்ட்!

கோவை, ஜூன் 18 2021: வங்கி, இன்சூரன்ஸ் மற்றும் இதர நிதிச்சேவை திட்டங்களை வழங்கி வரும் பிரபல தொழிலதிபர் சச்சின் பன்சாலின் நவி குழுமத்தின் ஒரு அங்கமாகிய நவி மியூச்சுவல் ஃபண்ட் , தற்போது புதிய முதலீட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்குகிறது.

முதலீட்டாளரின் தேவை, விருப்பம் போல, நினைத்த நேரத்தில் முதலீடு செய்யும் வசதி கொண்ட இத்திட்டம் நவி நிஃப்டி 50 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் திரட்டப்படும் தொகை, தேசிய பங்குச் சந்தையின் முன்னணி 50 பங்குகளில் முதலீடு செய்யப்படும். அவ்வகையில், இந்தத் திட்டம் இன்டெக்ஸ் ஃபண்ட் என்ற பொதுப் பெயரில் வழங்கப்படும ஒரு முதலீட்டு வாய்ப்பாகக் குறிப்பிடப்படுகிறது. தற்போது சந்தையில் உள்ள பல்வேறு இன்டெக்ஸ் ஃபண்ட் முதலீட்டுத் திட்டங்களில் மிகக் குறைந்த கட்டணம் பெறும் திட்டம் இதுவே. இந்தத் திட்டத்தில் ஆரம்பகால முதலீடு செய்ய தற்போது முதலீட்டாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். அதற்காக, இந்தத் திட்டம் 10 நாட்களுக்கு, அதாவது வரும் ஜூலை மாதம் 3-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை, முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற உள்ளது.

தேசிய பங்குச் சந்தையின் முதல் முன்னணி 50 பங்குகளில் இந்தத் தொகை முதலீடு செய்யப்படும் என்பதால், இதன்மூலம் கிடைக்கும் வருவாய் தேசிய பங்குச் சந்தையின் நிஃப்டி குறியீட்டின் போக்கை பிரதிபலிப்பதாக, அதை ஒட்டியே அமையும் என எதிர்பார்க்கலாம். தற்போது சந்தையில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் இன்டெக்ஸ் அடிப்படை முதலீட்டுத் திட்டங்களின் சராசரி கட்டணம் பொதுவாக, மொத்த முதலீட்டு மதிப்பில் 0.25 சதவீதம் என்ற அளவில் உள்ளது. குறிப்பிட்டு பார்க்கும்போது, பெரும்பாலான இன்டெக்ஸ் ஃபண்ட் திட்டங்களின் தற்போதைய கட்டண அளவு 0.15 முதல் 0.20 சதவீதம் வரை வேறுபடுகிறது. ஆனால், நவி மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் இந்தத் திட்டத்தில் மிகக் குறைந்த நிர்வாகக் கட்டணமாக, மொத்த மதிப்பில் 0.06 சதவீதத்தை இத்திட்டத்திற்கான நிர்வாகக் கட்டணமாகப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. நீண்டகால அடிப்படையில் முதலீட்டின் வளர்ச்சியைப் பெற விரும்புவோருக்கும், நிஃப்டி பங்குகளில் முதலீடு செய்து பலன்பெற நினைக்கும் முதலீட்டாளர்களுக்கும் ஏற்ற முதலீட்டுத் திட்டம் என இதைச் சொல்லலாம். இந்தப் புதிய திட்டத்தின் தொடக்கம் குறித்து பேசிய நவி மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் மேலாண் இயக்குனரும், தலைமை செயல் அதிகாரியுமான திரு. சவுரப் ஜெயின், "மியூச்சுவல் ஃபண்ட்களின் எல்லா முதலீட்டுத் திட்டங்களிலும் தகுதிவாய்ந்த நிதி நிபுணர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக முதலீட்டுத் தொகை நிர்வகிக்கப்படும். ஆனால், இன்டெக்ஸ் ஃபண்ட் திட்டங்களில் நிதி நிர்வாகிகளின் பங்களிப்பு, மற்ற முதலீட்டுத் திட்டங்களுடன் ஒப்பிடும்போது குறைவுதான் என்பது பொதுக் கருத்து. அதனால், இன்டெக்ஸ் ஃபண்டகளின் நிர்வாகக் கட்டணம் இயல்பாகவே குறைவாக இருக்கும். இதன்மூலமான சேமிப்பு முதலீட்டாளர்களுக்குத்தான் கிடைக்கிறது. ஆனாலும், எங்களது நிறுவனத்தில் இதுபோன்ற திட்டங்களிலும் நிதி நிர்வாகிகளின் கவனமும், அக்கறையும், ஈடுபாடும் குறைவதில்லை. அதே தரத்தில்தான் சேவை வழங்கப்படுகிறது. எங்களது நவி மியூச்சுவல் ஃபண்ட் திட்டத்தில், முதலீட்டு ஆலோசகர்கள் / முகவர்கள் இல்லாமல், முதலீட்டாளரே நேரடியாக செய்யும் முதலீட்டுக்கான கட்டணமாக 0.06 சதவீதமாக இருக்கும். இன்றைய நிலையில் சந்தையில் உள்ள திட்டங்களிலேயே மிகக் குறைந்த கட்டணம் பெறும் திட்டம் இதுதான். இவ்விதமாக, முதலீட்டாளர்களுக்கு அதிகபட்ச பலன்களை வழங்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதுதான் எங்களது நோக்கம்" எனத் தெரிவித்தார்.

மதுரை: மக்களிடையே சுற்றுசூழலின் அவசியம் மரம் வளர்ப்பதன் அவசியம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 2021-2022 ஆம் ஆண்டுக்கு எம் டி பி திட்டத்தின் கீழ் மொத்தம் 16640 மரக்கன்றுகள் நடுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கல்லணை கிராமத்தில் அதற்கான விதைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதை உதவி இயக்குநர் ( ஊதியம் (ம) வேலைவாய்ப்பு) காந்திராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

பாதாம் மரம், புன்கன் மரம், வேப்பமரம், இலுப்பை, தான்றி, சரக்கொன்றை, ஆவி, அயல்வாகை, புளி, செங்கொன்றை, இலவம், நாவல் உட்பட அரிய பலவித விதைகள் பதியம் போடுவதற்கு தயார்நிலையில் உள்ளன.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் பேராட்சி பிரேமா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன், கல்லணை ஊராட்சி மன்ற தலைவர் சேது சீனிவாசன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.





# பாம்பன் குந்துகால் துறைமுகம் 200 கோடி மதிப்பிட்டில் புதுபிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக மீனவர் நலத்துறை அமைச்சர் ஆர்.அனிதா ராதாகிருஷ்ணன்

ராமேசுவரம்,ஜூலை.18 2021: ராமநாதபுரம் மாவட்டம்,மண்டபம்,பாம்பன் குந்துகால்,ராமேசுவரம் பகுதியில் உள்ள துறைமுகங்கள் மற்றும் மீனவர்களுடனான ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆர்.அனிதா ராதாகிருஷ்ணன் வருகை வந்தார். மாவட்ட எல்லையில் மாவட்ட ஆட்சியர் சந்திரகலா சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இதனைதொடர்ந்து, மண்டபம் தெற்கு துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவ சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் கோரிக்கை மனு அளித்தனர். மண்டபம் பகுதியில் கடல்அட்டை மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மானிய டீசல் உயர்த்தி வழங்கிட வேண்டும். பாதுகாப்பான தூண்டில் வளைவு துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதனைதொடர்ந்து, பாம்பன் குந்துகால் துறைமுகத்தில் மீனவர் சங்க நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்:- பாம்பன் குந்துகால் துறைமுகம் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனை கருத்தில் கொண்டு 200 கோடி மதிப்பிட்டில் அனைத்து படகுகள் பாதுகாப்புடன் நிறுத்தும் வகையில் விரிவுபடுத்தப்படும். மீனவர்கள் பயன்படுத்தும் டீசலுக்கு நிர்ணய விலை ஏற்படுத்தப்படும். இலங்கையில் சேதமடைந்து விசைப்படகுகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க முதல்வரிடம் வலியுருத்தி ஏற்பாடுகள் செய்யப்படும். கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். கச்சத்தீவை மீட்க தமிழக முதல்வர் மற்றும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுருத்தி பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதனைதொடர்ந்து, ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவ சங்க நிர்வாகிகள் மற்றும் மீனவர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்வள கல்லூரி அமைக்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இதில் 25 சதவீதம் மீனவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு செய்திட நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்களின் நலன் காக்கும் அரசாக தமிழக அரசு இருந்து வருவதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சந்திகலா,கூடுதல் ஆட்சியர் பிரவீன்குமார், சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம்,முருகேசன், மற்றும் முன்னர்ள அமைச்சர் சந்திய மூர்த்தி,மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் கருணாகரன், மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் கலந்தகொண்டனர். இதன் பின் ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தை ஆய்வு செய்தார். இதனைதொடர்ந்து, ராமநாதபுரத்தில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதன் பின் மூக்கையூர் துறைமுக பணிகளை ஆய்வு செய்தார்.



# உசிலம்பட்டி பகுதியில் நெல் கொள்முதல் மையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யக்கோரி விவசாயிகள் கோட்டாட்சியரிடம் மனு அளித்தனர்

மதுரை ஜூலை 18. 2021: மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டி, விக்கிரமங்கலம், வின்னக்குடி, சொக்கத்தேவன்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த 20நாட்களுக்கு மேலாக அரசு நெல் கொள்முதல் மையத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை அதிகாரிகள் கொள்முதல் செய்யபட்டவில்லை என கூறப்படுகிறது. இதனால் மழையில் நனைந்து நெல்மூட்டைகள் அனைத்தும் சேதமாகி வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து அரசின் கவனத்திற்கு பல முறை கொண்டுசென்ற போதும், நெல் மூட்டைகள் அரசின் வாணிப நெல்கொள்முதல் மையத்தின் மூலமாக கொள்முதல் செய்யப்படவில்லை. இந்நிலையில் திமுகவுடன் கூட்டணியில் உள்ள அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநிலபொதுச்செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கதிரவன் மற்றும் விவசாயிகள் அரசு நெல்கொள்முதல் மையத்தில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை அரசு சார்பில் அதிகாரிகள் உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோட்டாட்சியர் ராஜ்குமாரிடம் கோரிக்கை மனு வழங்கினார். மனுவை பெற்ற கோட்டாட்சியர் அரசின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதனைதொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கதிரவன் நெல் கொள்முதல் மையத்தில் கொள்முதல் செய்வதில் அரசுக்கு கெட்டபெயரை ஏற்படுத்தி தருவதற்காக பலர் முயற்சி மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

# விக்கிரவாண்டி பேரணியில் மூன்று கோவில்களில் கும்பாபிஷேகம்

விக்கிரவாண்டி, ஜூலை 18.2021: விக்கிரவாண்டி அடுத்த பேரணியில் மூன்று கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடந்தது. திண்டிவனம் வட்டம் பேரணி கிராமத்திலுள்ள செல்வ வினாயகர் , முத்து மாரியம்மன், செல்லியம்மன் கோவில்கள் கிராம பொதுமக்களால் புதுப்பிக்கப்பட்டு , அதன் கும்பாபிஷேகத்தை யொட்டி கடந்த 14 ம் தேதி மாலை கணபதி ஹோமத்துடன் யாகசாலை பூஜை துவங்கியது. நேற்று காலை 8.30 மணிக்கு நான்காம் கால யாக சாலை பூஜை முடிந்து காலை 9 மணிக்கு செல்வவினாயகர் கோவில் கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது.

அதனை தொடர்ந்து முத்துமாரியம்மன் ,செல்லியம்மன் கோவில் கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது.

கோவில் யாகசாலை பூஜை மற்றும் கும்பாபிஷேகத்தை பெரியதச்சூர் சாய் சிவகுருநாத சர்மா தலைமையில் சிவக்குமார் ஆகியோர் செய்தனர் . விழாவில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ,எம்.எல்.ஏ., சிவக்குமார், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் சேதுநாதன், டாக்டர் மாசிலா மணி மற்றும் சுற்றுப்புற கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் . விழா ஏற்பாடுகளை கிராம முக்கியஸ்தர்கள் முன்னின்று செய்தனர் .



விக்கிரவாண்டி அடுத்த பேரணி செல்வவினாயகர் கோவில் கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடந்தது.




ஊத்தங்கரை: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கொண்டம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 119 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது, நிகழ்ச்சிக்கு தலைமையாசிரியர் கயல்விழி தலைமை தாங்கினார்,உதவி ஆசிரியர்கள் பிரகாசம்,அருண்குமார்,கலைச் செல்வன்,சுதா கலந்து கொண்டனர்.

# மதுரை தனக்கன்குளத்தில் வீட்டின் பூட்டை உடைத்து 7 பவுன் தங்கம், அரை கிலோ வெள்ளி மற்றும் பணம் கொள்ளை; மர்ம நபருக்கு போலீசார் வலைவீச்சு

மதுரை ஜூலை 18. 2021: மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தாலுகா தனக்கன்குளம் பி.ஆர்.சி காலனி சேர்ந்த காமராஜ் இவர் சென்ற மாதம் 26 ஆம் தேதி தனது வீட்டை பூட்டி விட்டு வேலூரில் உள்ள அவரது உறவினர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதனை நோட்டமிட்ட மர்ம நபர் வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 7 பவுன் தங்கம், அரை கிலோ வெள்ளி மற்றும் 39,700 ரூபாய் பணத்தை திருடிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று மாலை 5 மணி அளவில் காமராஜ் வீட்டில் வந்து பார்த்த போது பின்பக்க கதவு உடைத்து பீரோவில் இருந்த தங்கம் மற்றும் வெள்ளி பணம் உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து திருநகர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் கொள்ளையடித்த மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Sunday, July 18, 2021 | Rs.2/- | ISSUE - 4

## Finance Minister Nirmala Sitharaman addresses US India Business Council on 'Maximizing India's Sustainable and Inclusive Growth as a Global Destination for U.S. Investment'



Chennai, July 18, 2021: Union Minister for Finance & Corporate Affairs, Smt. Nirmala Sitharaman today participated in the Roundtable organized by US India Business Council (USIBC) on "Maximizing India's Sustainable and Inclusive Growth as Global Destination for U.S. Investment' through video conferencing which witnessed participation of prominent foreign investors like General Electric, Baxter Healthcare USA, Brambles, Marsh & McLennan Companies, PepsiCo amongst others.

The Roundtable provided the investors with an opportunity to engage with Finance Minister and other senior officials of Government of India. The areas of discussion included Life Sciences, Green Energy, Infrastructure, Insurance, Defence, Security, Manufacturing, Renewable Energy, Power, Pharmaceuticals, Textiles and Hospitality and Digital economy.

Smt. Sitharaman acknowledged the efforts of CEOs of top-40 American companies for creating a global task force to mobilize resources for India during the 2nd COVID wave. She also mentioned that India and the U.S. have also set an ambitious target of achieving $500 billion in two-way trade.

Smt. Sitharaman spoke about stimulus packages announced recently which is tailored to meet the basic requirement of investors. She also informed the investors about India's consistent and continuous wide-ranging reforms which makes the country an attractive destination for foreign investment and how India continues to rise as a global economic powerhouse. She mentioned about this year's budget initiative pertaining to International Financial Services Centre (IFSC) at GIFT City, where the Government is committed towards developing it into a globally competitive hub for innovation and financial activities to serve the Indian economy and the region as a whole.

## Details about Central government's welfare schemes should reach the grassroots level: MoS L Murugan tells MIB media divisions

Chennai, July 17, 2021: The Prime Minister, Shri Narendra Modi interacted with CMs of Tamil Nadu, Andhra Pradesh, Karnataka, Odisha, Maharashtra and Kerala to discuss Covid related situation. Union Home Minister, Health Minister were also present in the meeting.The Chief Ministers thanked the Prime Minister for lending all possible help and support in tackling Covid. They briefed the Prime Minister about the progress of vaccination and steps that are being taken to contain the spread of the virus in their states. They also provided feedback about the vaccination strategy.





The Chief Ministers talked about the steps taken to boost medical infrastructure and gave suggestions on dealing with any possible rise of cases in future. They also discussed post-Covid issues being faced by patients and steps being taken to provideassistance in such cases. They gave assurance that they are doing their best to control the surge of infection.

Union Home Minister mentioned that these six states account for more than eighty percent of the total cases during the month of July , while some of these states have very high test positivity rate as well. Union Health Secretary discussed the Covid cases in the country, and talked about the need to reinforce Covid appropriate behaviour and containment measures in the districts with high case load. He also suggested that opening up of these districts should be done in a graded and calibrated manner.

In his closing remarks the Prime Minister lauded the state governments for their mutual cooperation and learning in their fight against the pandemic. The Prime Minister said that all of us are at a point where apprehensions of the third wave are continuously expressed. Despite experts giving positive signals due to the downward trends increasing number of cases in few states is still worrisome. The Prime Minister pointed out that during the last week 80 per cent cases as well as 84 per cent unfortunate deaths came from the states present in the meeting. Initially experts believed that states where the second wave originated will see the normalization first. However, increasing numbers in Kerala and Maharashtra are cause of grave worry, said the Prime Minister.

The Prime Minister cautioned that similar trends were seen in January-February before the second wave. That's why, the Prime Minister insisted, that in the states where cases are rising, we have to take proactive measures to prevent the possibility of the third wave.

The Prime Minister underlined the expert's view that if the cases keep on rising for long time, chances of mutation of the Corona virus will also increase and dangers of new variants will also rise. Therefore, said the Prime Minister, we need to continue with the strategy of Test, Track, Treat and Teeka (vaccination) while putting special focus on Micro-containment zones. Districts with large numbers should be focussed on. Shri Modi stressed increased testing in entire states. Terming vaccine as a strategic tool for high infection areas, the Prime Minister stressed the effective use of vaccination. The Prime Minister praised the states who are using this time to improve their RT-PCR testing capacity.



The Prime Minister talked of the financial help that is being provided for enhancing medial infrastructure like ICU beds and testing capacity. Referring to the recently approved Rs 23000 emergency Covid response package, the Prime Minister asked the states to use the funds to strengthen medical infrastructure.

The Prime Minister exhorted the states to fill the infrastructural gaps, specially in the rural areas. He also asked to strengthen IT systems, control rooms and call centres so that citizens get access to resources and data in a transparent manner and patients are spared the hassle. Shri Modi said that out of 332 PSA plants allocated to the states present in the meeting, 53 plants have been commissioned. He asked the Chief Ministers toexpedite the completion of the plants. The Prime Minister made special mention of the need to protect children from being infected and make all possible arrangement in this regard.

The Prime Minister noted with concern the rise of number of cases in Europe, America and Bangladesh, Indonesia Thailand and many other countries. This should alert us and the world, said the Prime Minister.

The Prime Minister reiterated that Corona is not over and expressed deep concern over the pictures that are coming post lockdown. He emphasized need to follow protocol and avoid crowding as many states in the meeting have metropolitan cities with dense population. He also called upon political parties, social organizations, and NGOs to spread awareness among people.

## STERLITE COPPER INAUGURATES SKILL DEVELOPMENT CENTER; PROJECT TO BENEFIT 600 FAMILIES EACH YEAR

Thoothukudi, July 18, 2021: The number of youths seeking gainful employment has risen rapidly in the past year, with many families facing income shortages and job losses due to the pandemic. Keeping this mind, on the occasion of World Skilling Day, Sterlite Copper has launched a new Skill Development Centre under the aegis of its Tamira Muthukkal project, aimed at offering skill-based training modules to youths in and around Thoothukudi.

The centre is supported by the Vedanta Foundation, which has been actively involved in making education and skill development available and accessible to all. The major thrust of its projects are focused on making people self-reliant by providing them opportunities related to livelihood and employment.

Since 1992, the Vedanta Foundation has been helping create livelihood opportunities through its skill development centres. So far, the organisation has trained over 12 lakh youths across 180 Vedanta Rojgaar centres spread across the country. It is now launching 101 new centres in 2021-22, with the very first one being inaugurated in Thoothukudi today in association with Sterlite Copper. The new centre will leverage the Foundation's deep expertise in the domain of skill training and help unlock fresh opportunities for youths in Thoothukudi.

To begin with, the centre in Thoothukudi will offer courses focusing on 5 trades, namely, Sewing machine operator, Welding, General Electrics, Logistics and Food Processing, which have been identified as priority areas via the Skill Gap Assessment Report of the National Skill Development Corporation (NSDC).

Each course involves 300-400 hours of training. The set of courses offered will be further expanded based on community requirements. All training will be conducted following strict social distancing protocols and will be a combination of online and offline classes.

In the first phase, Sterlite Copper is aiming to provide training to 600 youths, which will later be increased to 1500. They will also be supported in getting appropriate job placements, with the company committing to finding employment for at least 70% of the particpants. The training will be provided by the Vedanta Foundation in partnership with Birla Edutech Limited (Training and Placement Partner).



Speaking on the occasion, Ms. A Sumathi, COO, Sterlite Copper, said, "The future of our communities lies in the hands of our youths. I hope that their unlimited capacity to work hard and dream big will be effectively honed and channelled through these programs, which can in turn help trigger holistic development for entire communities."

Ms. Mariammal, a resident of Sankaraperi village, has enrolled for the tailoring course, sharing "I am looking forward to starting my training and am confident that I will undertake it with full seriousness and complete it. I shall give my best efforts and am thankful to Sterlite for this opportunity."

Ms. Muhila Devi from Rajavinkovil village, who has also enrolled for tailoring, said "It is wonderful that Sterlite Copper has undertaken this initiative at a time when many of us are facing challenges in earning income due to the pandemic. It will benefit all those who are keen on developing their skills and willing to commit the time for it."

This initiative is a continuation of the company's much-lauded Tamira Muthukkal skill development program which aims to ensure positive growth for local communities through the youth population. Previously, Sterlite Copper has also sponsored maritime trainings for local youth, in addition to providing scholarships to meritorious students.

## Change in Arrival/Departure Timings of Special Trains

Chennai, July 18, 2021: In order to avoid congestion in Dr MGR Chennai Central Station the Arrival/Departure timings of the following trains are revised as detailed below:

1. Change in Arrival Timings

Train No. 02007 Visakhapatnam – Dr MGR Chennai Central Weekly Special Journey commencing on 23rd July, 2021 will arrive Dr MGR Chennai Central at 07.50 hrs instead of 07.40 hrs (Late by 10 Minutes)

Train No. 02869 Visakhapatnam – Dr MGR Chennai Central Weekly Special Journey commencing on 19th July, 2021 will arrive Dr MGR Chennai Central at 07.50 hrs instead of 07.40 hrs (Late by 10 Minutes)

Train No. 02839 Bhubaneswar - Dr MGR Chennai Central Weekly Special Journey commencing on 22nd July, 2021 will arrive Dr MGR Chennai Central at 07.50 hrs instead of 07.40 hrs (Late by 10 Minutes)

Train No. 08231 Bilaspur - Dr MGR Chennai Central Weekly Special Journey commencing on 18th July, 2021 will arrive Dr MGR Chennai Central at 07.50 hrs instead of 07.40 hrs (Late by 10 Minutes)

Train No. 06096 Tirupati - Dr MGR Chennai Central Daily Special Journey commencing on 18th July, 2021 will arrive Dr MGR Chennai Central at 22.05 hrs instead of 22.00 hrs (Late by 5 Minutes)

Train No. 06022 Mysore - Dr MGR Chennai Central Daily Special Journey commencing on 17th July, 2021 will arrive Dr MGR Chennai Central at 06.45 hrs instead of 06.40 hrs (Late by 5 Minutes)

Train No. 06090 Jolarpettai - Dr MGR Chennai Central Daily Special Journey commencing on 18th July, 2021 will arrive Dr MGR Chennai Central at 09.10 hrs instead of 09.20 hrs (Early by 10 Minutes)

2. Change in Departure Timings

Train No. 06151 Dr MGR Chennai Central - Nizamuddin Weekly Special Journey commencing on 04th September, 2021 will leave from Dr MGR Chennai Central at 06.00 hrs instead of 06.05 hrs (Early by 5 Minutes)

Train No. 02269 Dr MGR Chennai Central - Nizamuddin Bi- Weekly Special Journey commencing on 03rd September, 2021 will leave from Dr MGR Chennai Central at 06.35 hrs instead of 06.40 hrs (Early by 5 Minutes)

## OPPO thanks its customers: Fans get the chance to grab the newly launched 5G Reno6 Pro 5G, signed by Ranbir Kapoor

New Delhi, July 18, 2021: Following the successful launch of the Reno6 series, OPPO, the leading global smart device brand, announced a social giveaway activity in which OPPO will give 10 Reno6 Pro 5G special edition boxes with smartphones signed by none other than the Bollywood heartthrob Ranbir Kapoor himself.

Between July 14th and July 17th, OPPO and Ranbir fans will have the unique opportunity to win a Reno6 Pro special edition box with Ranbir Kapoor's Signature. All you need to do is to log onto OPPO's official website to participate, follow the guidelines, and be the lucky one.

As a part of this social giveaway activity, 2 phones will be given out each day, on a first-come, first-get basis within the stipulated 2-hour time frame. The first phase of the contest was rolled out during the launch event of the OPPO Reno6 series yesterday, wherein 2 lucky winners were chosen. To participate in the second phase of the contest, consumers need to follow the guidelines given in the website: https://www.oppo.com/in/store/contents/event/reno6pro/




The OPPO Reno6 Pro 5G offers a next-generation portrait video experience, aided by industry-first Bokeh Flare Portrait Video, AI Highlight Video, Focus Tracking, Soloop among others, enabling you to capture DSLR level videos - Nothing less than a personal studio in your pocket. The power-packed all-rounder Reno6 Pro 5G also features the latest flagship MediaTek Dimensity 1200 chipset, OPPO's exclusive Reno Glow design, Smart 5G capabilities, ColorOS 11.3, 4500 mAh battery, 12 GB + 256 GB (RAM+ROM), and 65W SuperVOOC 2.0 fast charging capabilities. All this within a stunningly sleek, lightweight, and glittery body.

## Shriram City Union Finance named One of The Best Places to Work in India by AmbitionBox

Chennai, July 18, 2021: Shriram City Union Finance (SCUF), a leading Non-Banking Financial Company is delighted to announce that it has been listed as a Best Place to Work in India in 2021 by AmbitionBox, an Info Edge subsidiary. Specifically in the Financial Services Industry (Large Company segment) SCUF has been named as the No.1 Best Place to Work. Companies with 10,000 50,000 employees are categorized as Large Companies. AmbitionBox recognizes employers that create great work cultures and the winner is judged solely on feedback from company employees.

This recognition by AmbitionBox is India's First Employee Choice Award. The awards also constitute an industry-wise ranking for the best workplaces in various industries such as IT/ITES, Pharma, Banking, Financial Services, Internet, Automobile, Retail and Construction.

"It has been a tremendous year of growth for Shriram City. We have a strong workforce of 25,000 team members and in 2021 we were able to grow the business, while preserving a positive workplace environment, both remotely and in office, even with a tough external environment. The Shriram ethos of serving the Common Man is deeply engrained within our DNA. During this pandemic year, the teams have added a new meaning to it with their unending support to our customers. It is this caring attitude towards customers & colleagues which helps us stand out and makes SCUF a special place to work," said Y S Chakravarti, MD & CEO, Shriram City Union Finance. "We credit our success to the high-touch approach of our leadership team during these times of remote working, giving employees a clarity of purpose throughout. We are extremely proud to receive this recognition from AmbitionBox. It's a testament to the collaborative, high performing workplace with an Intrapreneurial mindset we have been able to cultivate." he added.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction